இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

யோவான் இயேசுவிடம், “போதகரே, ஒருவர் உமது பெயரால் பேய்கள் ஓட்டுவதைக் கண்டு, நாங்கள் அவரைத் தடுக்கப் பார்த்தோம். ஏனெனில் அவர் நம்மைச் சாராதவர்” என்றார். அதற்கு இயேசு கூறியது: “தடுக்க வேண்டாம். ஏனெனில் என் பெயரால் வல்லசெயல் புரிபவர் அவ்வளவு எளிதாக என்னைக் குறித்து இகழ்ந்து பேசமாட்டார். ஏனெனில் நமக்கு எதிராக இராதவர் நம் சார்பாக இருக்கிறார்.

நீங்கள் கிறிஸ்துவைச் சார்ந்தவர்கள் என்பதால் உங்களுக்கு ஒரு கிண்ணம் தண்ணீர் கொடுப்பவர் கைம்மாறு பெறாமல் போகார் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். (மாற்கு 9:38-41)



# 107- வது உலக புலம்பெயர்ந்தோர்- அகதிகள் தினம்

## திருத்தந்தையின் செய்தி

## கருப்பொருள்: ‘நாம்’ என்னும் பரந்த அளவில்

‘அன்பு சகோதர-சகோதரிகளே!’ (Fratelli Tutti) எனும் என்னுடைய அறிவுரை சுற்றறிக்கையில், இக்காலத்து தொற்றுநோய் நெருக்கடி கடந்துவிட்டால், மனுக்குலத்தின் மீதான நமது அக்கறை மேலும் வீழ்ச்சியடைவதோடு, புதிய வடிவிலான சுய பாதுகாப்பு அம்சங்கள் தலைத்தூக்கும். எனவே, கடவுளுக்குத் திருவுளமானால், நாம் இனியும் ‘அவர்கள்’, ‘அவர்களின்’ என்று எண்ணாமல் ‘நாம்’ ‘நமது’ என்று எண்ணிச் செயலாற்றும் நிலை ஏற்பட வேண்டும். (எண் 35)

இக்காரணத்திற்காக, இந்த ஆண்டு உலக புலம்பெயர்ந்தோர் மற்றும் அகதிகள் தினத்திற்கான செய்தியை அர்ப்பணிக்க விரும்புகிறேன். ‘ நாம்’ எனும் கருத்தோட்டம் கடவுளின் உலகப் படைப்பிலேயே வெளிப்பட்டது. கடவுள் தம் உருவில் மானிடரைப் படைத்தார்; கடவுளின் உருவிலேயே அவர்களைப் படைத்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார். கடவுள் அவர்களுக்கு ஆசி வழங்கி, “பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்கள்; அதை உங்கள் ஆற்றலுக்கு உட்படுத்துங்கள்; கடல் மீன்கள், வானத்துப் பறவைகள், நிலத்தில் ஊர்ந்து உயிர் வாழ்வன அனைத்தையும் ஆளுங்கள்” (தொ.நூ. 1:27-28)

கடவுள் நம்மை ஆணாகவும் பெண்ணாகவும் படைத்தார், வேறுபட்ட தோற்றத்தில் படைக்கப்பட்டாலும் இருவரும் இணைந்துதான் ‘நாம்’ உறவு நிலைக்கு ஆளாகிறார்கள். இதில் வேற்றுமையில் ஒற்றுமை உருவாகிறது.

கீழ்ப்படியாமையால் நாம் கடவுளை விட்டு விலகியபோதும், அவர் தமது இரக்கத்தால் நமது ஒப்புரவுக்கும் நல்லிணக்கத்திற்கும் தனிநபர்களாக அல்ல, நம்மை ஓரினமாக "நாம்” எனும் உறவில் அனைத்து மனுக்குலத்தையும் அரவணைக்கும் பொருள் தந்தார். ‘பின்பு விண்ணகத்திலிருந்து எழுந்த பெரும் குரல் ஒன்றைக் கேட்டேன். அது, “இதோ! கடவுளின் உறைவிடம் மனிதர் நடுவே உள்ளது. அவர் அவர்கள் நடுவே குடியிருப்பார். அவர்கள் அவருக்கு மக்களாய் இருப்பார்கள். கடவுள்தாமே அவர்களோடு இருப்பார்; அவரே அவர்களுடைய கடவுளாய் இருப்பார்’ (திவெ. 21)

உண்மை என்னவென்றால், நாம் அனைவரும் ஒரே படகில் இருக்கிறோம்; ஒன்றாக வேலை செய்ய அழைக்கப்பட்டுள்ளோம். இனி நம்மைப் பிரிக்கும் சுவர்கள் இருக்கலாகாது, மற்றவர்கள் என்றில்லாமல், மனிதநேயத்தின் அனைவரையும் உள்ளடக்கிய ஒரே "நாம்" மட்டுமே இருந்திடல் வேண்டும்.

எனவே இந்த உலக தினத்தையொட்டி இரு தரப்பினரோடு, முதலில் கத்தோலிக்க மக்களோடு, பின்னர் பரந்த "நாம்" என்ற நிலைபாட்டில் இவ்வுலக மக்களோடு உரையாற்ற விரும்புகிறேன்.

### அனைத்துலக திருஅவையாக

நாங்கள் "கத்தோலிக்கராக" இருப்பதால் மிகவும் நம்பிக்கைகொண்டிருக்கிறோம். ‘நீங்கள் ஒரே எதிர்நோக்கு கொண்டு வாழ அழைக்கப்பட்டிருக்கிறீர்கள். ஒரே எதிர்நோக்கு இருப்பது போல, உடலும் ஒன்றே; தூய ஆவியும் ஒன்றே. அவ்வாறே, ஆண்டவர் ஒருவரே; நாம் கொண்டுள்ள நம்பிக்கை ஒன்றே; திருமுழுக்கு ஒன்றே’ (4:4-5) என்று புனித பவுல் எபேசியருக்கு நினைவுபடுத்தியபடி, கத்தோலிக்க திருஅவை உறுப்பினர்களோடு இன்னும் அதிக அர்ப்பண உணர்வோடு இணைந்திருக்க வேண்டும். இதோ! உலக முடிவுவரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்” (மத் 28:20) எனும் ஆண்டவரின் உறுதிமொழிக்கேற்ப திருஅவையின் கத்தோலிக்கம் மற்றும் உலகளாவிய தன்மை எக்காலத்திலும் நிலைநிறுத்தப்பட வேண்டும்.



அனைவரையும் அரவணைத்து, பன்முகத் தன்மையில் ஒற்றுமையை உருவாக்கவும் வேறுபாடுகளை ஒருங்கிணைத்து செயலாற்ற தூய ஆவியார் நமக்கு உதவி வருகிறார். வெளிநாட்டினர், புலம்பெயர்ந்தோர் மற்றும் அகதிகளின் பன்முகத் தன்மையை எதிர்கொள்வதும் மற்றும் பன்முகக் கலாச் சார உரையாடலும், நாம் திருஅவையாக வளரவும் ஒருவருக்கொருவர் வளப்படுத் தவும் வாய்ப்பாக உள்ளது.

“அப்படிச் செல்லும்போது ‘விண்ணரசு நெருங்கி வந்துவிட்டது’ எனப் பறைசாற்றுங்கள். நலம் குன்றியவர்களைக் குணமாக்குங்கள்; இறந்தோரை உயிர் பெற்றெழச் செய்யுங்கள்; தொழுநோயாளரை நலமாக்குங்கள்; பேய்களை ஓட்டுங்கள்; கொடையாகப் பெற்றீர்கள்; கொடையாகவே வழங்குங்கள்.” (மத் 10:7-8) எனும் இயேசு கிறிஸ்துவின் அறிவுறுத்தலுக்கு ஏற்ப, கத்தோலிக்கர்கள் ஒன்றாக வேலை செய்ய அழைக்கப்படுகிறார்கள், ஒவ்வொருவரும் தனது சொந்த சமூகத்தில், இயேசு கிறிஸ்துவால் திருத்தூதர்களிடம் ஒப்படைக்கப்பட்ட பணியை ஏற்றுச் செய்யும்போது, திருஅவை அனைவரையும் உள்ளடக்கிய ஒன்றாகத் திகழ்கிறது.
நாட்டிற்குள் "புலம்பெயர்ந்தோரின் தற்போதைய வருகை நமது மறைபரப்புக்கான ஒரு புதிய எல்லையாக உள்ளது. இயேசு கிறிஸ்துவையும் அவரது நற்செய்தியையும் அறிவிப்பதற்கான ஒரு வாய்ப்பாகவும் நாம் காணலாம். மனுக்குலத்தைப் புதுப்பிப்பதற்கும், அவர்களுக்கு நீதி மற்றும் அமைதியான எதிர்காலத்தை உருவாக்குவதற்கும், அனைத்து ஆண்களுக்கும் பெண்களுக்கும் "நாம்" என்று ஒரு பரந்த நோக்கத்துடன் ஒன்றாக பயணிக்க இந்த வேண்டுகோளை விடுக்கிறேன்.

நமது சமுதாயங்கள் "வண்ணமயமான" எதிர்காலமும் பன்முகத்தன்மையும் கொண்ட பண்பாட்டு பரிமாற்றங்களால் வளப்படுத்தப்படுகின்றன. இதனால், நாம் இப்போது ஒற்றுமையுடனும் அமைதியுடனும் ஒன்றாக வாழ கற்றுக்கொள்கிறோம். “பார்த்தரும், மேதியரும், எலாமியரும், மெசப்பொத்தாமியா, யூதேயா, கப்பதோக்கியா, போந்து, ஆசியா ஆகிய நாடுகளில் வாழ்கின்றவர்களும், பிரிகியா, பம்பிலியா, எகிப்து, சிரேன் நகரையடுத்த லிபியாவின் பகுதிகளில் வாழும் மக்களும் உரோமையிலிருந்து வந்து தங்கியிருந்தவர்களும், யூதரும் யூதம் தழுவியோரும் கிரேக்கரும், அரேபியரும் ஆகிய நாம் நம்மொழிகளிலே கடவுளின் மாபெரும் செயல்களை இவர்கள் பேசக்கேட்கிறோமே!” ( திப2:9-11) என பெந்தகோஸ்து அன்று திருஅவையில் காணப்பட்ட பன்முகத்தன்மையை நான் இன்றும் காண விழைகிறேன்.

இது புதிய எருசலேமின் (திவெ 21:3) இலட்சியமாகும். அங்கு அனைத்து மக்களும் அமைதியுடனும் ஒற்றுமையுடனும் ஒன்றிணைந்து, கடவுளின் நற்குணத்தையும் படைப்பின் வல்ல செயல்களையும் கொண்டாடுகின்றனர். எவ்வாறாயினும், இந்த இலட்சியத்தை அடைய, நம்மைப் பிரிக்கும் சுவர்களை உடைக்கவும், நமது ஆழ்ந்த இணைப்பை ஒப்புக்கொள்வதிலும், சந்திப்பு பண்பாட்டை வளர்க்கும் பாலங்களைக் கட்டவும் நாம் எல்லா முயற்சிகளையும் செய்ய வேண்டும். “உயர்குடிமகன் ஒருவர் ஆட்சியுரிமை பெற்றுவரத் தொலை நாட்டிற்குப் போகப் புறப்பட்டார். அப்போது அவர் தம் பணியாளர்கள் பத்துப் பேரை அழைத்து, பத்து மினாக்களை அவர்களிடம் கொடுத்து அவர்களை நோக்கி, ‘நான் வரும்வரை இவற்றை வைத்து வாணிகம் செய்யுங்கள்’ என்று சொன்னார் (லூக் 19:12-13). அவ்வாறே, ஆண்டவர் நம்மிடமும் கணக்குக் கேட்பார்.

“நான் மாந்தர் யாவர்மேலும் என் ஆவியைப் பொழிந்தருள்வேன்; உங்கள் புதல்வரும் புதல்வியரும் இறைவாக்கு உரைப்பர்; உங்கள் முதியோர் கனவுகளையும் உங்கள் இளைஞர்கள் காட்சிகளையும் காண்பார்கள்.” ( யோவே 2:28) என்றார் இறைவாக்கினர் யோவேல். அவ்வாறே, நாமும் ஒன்றாக அச்சமின்றி, இந்த ஒரே பயணத்தில் தோழர்களாக, இப்பூமியை நமது பொதுவான இல்லமாக ஏற்று, சகோதர சகோதரர்களாக, அனைவரும் ஒன்றாக ‘நாம்’ என்னும் பரந்த அளவில் கனவு காண அழைக்கப்படுகிறோம், ‘அன்பு சகோதர-சகோதரிகளே!’ (Fratelli Tutti 8)

திருத்தந்தை பிரான்சிஸ்




"மேய்ப்புப்பணியாளரும், இறையியலாளருமான பிரான்சிஸ்" என்ற தலைப்பில், திருத்தந்தையின் எண்ணங்களை மையப்படுத்திய ஒரு நூலை, வத்திக்கான் பதிப்பகம் வெளியிட்டது"

# மலேசியாவில் புலம்பெயர்ந்தோரும் அகதிகளும்

## சிறப்புக் கட்டுரை

புலம்பெயர்வு என்பது எதிர்நோக்கின் கதை. வரலாறு முழுவதும் மில்லியன் கணக்கான மக்கள் தங்களுக்கும் தங்களின் அன்புக்குரியவர்களுக்கும் சிறந்த வாழ்க்கையை தேடி புலம்பெயர்ந்துள்ளனர். நம் சொந்த முன்னோர்களும் மூதாதையர்களும் இந்நாட்டில் புதிய வாழ்வைத் தேடி தங்களது சொந்த பூர்வீகத்தைத் விட்டு பயணம் மேற்கொண்டனர். இதனால், இன்று நமக்கு அறிமுகமான மற்ற இனங்கள், மதங்கள், உணவுகள் மற்றும் வாழ்க்கை முறை ஆகியவற்றின் பிறப்பிடமாக நமது மலேசியா, "உண்மை ஆசியா"வாக விளங்குகிறது.

இவ்வாறு புலம்பெயர்ந்தோரின் படைப்பாற்றல், தொழில், அறிவாற்றல் மற்றும் கடின உழைப்பு நம் நாட்டின் மேம்பாட்டிற்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் ஊக்குவிப்பாக விளங்கியது, விளங்கியும் வருகிறது. இவர்களில் பலர், உள்நாட்டு மக்களால் ஒதுக்கப்பட்ட குறைந்த ஊதியம் அல்லது திறனற்ற வேலைகளை எடுத்துச் செய்ய தயாராக உள்ளனர். இவர்கள் நமக்கு சிறந்த வாழ்க்கைத் தரத்தைக் கொடுத்திருக்கிறார்கள் என்றால் மிகையாகாது.

மலேசியாவில் சுமார் 6 மில்லியன் புலம்பெயர்ந்தோர் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. அவர்களில் 2 முதல் 4 மில்லியன் பேர் முறையான ஆவணங்களின்றி இருக்கக்கூடும்.

சிலர் வேலை வாய்ப்புகள் அல்லது திருமணத்திற்காக புலம்பெயர்ந்தாலும், சொந்த நாடுகளில் ஏற்படும் அரசியல் ஒடுக்குமுறை, அமைதியின்மை, வன்முறை, போர்கள் மற்றும் பல நெருக்கடிகளிலிருந்துத் தப்பி புகலிடம் தேடி அகதிகளாகவும் இங்கு உள்ளனர். ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர் ஆணையம் (UNHCR) ஏறக்குறைய 108,332 நாடற்றவர்கள் பெரும்பாலும் சபா மற்றும் சரவாக் பகுதியில் உள்ளனர் என்று அறிவித்துள்ளது. ஜூலை 2021 இறுதியில், மலேசியாவில் ஏறக்குறைய 179,450 அகதிகள் மற்றும் புகலிடக் கோரிக்கையாளர்கள் உள்ளனர் என்றும் அவர்களில் 45,180 பேர் 18 வயதுக்குக் குறைவான சிறுவர்கள் என்றும் அந்த அறிக்கை கூறுகிறது.

கடந்த காலத்தில் நம் நாட்டிற்குள் நுழைந்த மில்லியன் கணக்கான புலம்பெயர்ந்தோரின் திறன்களும் பங்களிப்புகளும் ஏற்றுக் கொள்ளப்பட்டதோடு வரவேற்கப்பட்டது. இன்று, நம் முன்னோர்களுக்கு அன்று வழங்கப்பட்ட அதே வரவேற்பை, இக்காலத்துப் புலம்பெயர்ந்தோருக்கு வழங்க இயலுமா? எனும் கேள்வி எழும்புகிறது.

நம்மிடையே உள்ள புலம்பெயர்ந்தோர் மற்றும் அகதிகளை சகோதர சகோதரிகளாகக் கொண்டு - அவர்களின் தாய், தந்தை, மகன் அல்லது மகள் ஆகியோருக்கும் அவர்களின் அன்புக்குரியவர்களுக்கும் ஓர் ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்க நாம் அழைக்கப்படுகிறோம். அவர்களை மரியாதையுடன் நடத்துவதோடு, முழுமையான மனித மாண்புடன், பாதுகாப்பு மற்றும் எதிர்நோக்குடன் நல்வாழ்வு வாழ ஆதரவளிக்க வேண்டும்.

இக்காலத்தில் ஆள்கடத்தலுக்குப் பலியாகி வரும் ஆயிரக்கணக்கான புலம்பெயர்ந்தோரைப் பார்க்கிறோம். இதில் கட்டுமானம், பெருந்தோட்டம் மற்றும் மீன்பிடி தொழில்களில் வேலை செய்பவர்களில் பெரும்பாலும் மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப்படுகிறார்கள். பலர் சூடான, அசுத்த மற்றும் நெரிசலான குடியிருப்புப் பகுதிகளில் வேறு வழியின்றி உயிர் வாழத் தவிக்கிறார்கள்.

நமது கிறிஸ்தவ மனசாட்சியானது, இத்தகையப் புலம்பெயர்ந்தோருக்கு நியாயமான ஊதியம் மற்றும் மனிதாபிமான வாழக்கைச் சூழலை உறுதி செய்யவும் அவர்களின் மாண்பை மீட்டெடுக்கவும் உதவ வேண் டும் என்று கோருகிறது.

### நாம் அனைவரும் ஒரு பெரிய குடும்பம்

அகதிகளை நம் நாடு முழுவதும் காணலாம். நாம் எத்தனை பேருக்கு உதவ



முடியும்? சுமார் நான்கு வருடங்களுக்கு முன்பு, நாம் மியான்மார் மற்றும் ஆப்பிரிக்காவில் இருந்து வந்திருந்த அகதிகளுடன் தொடர்பைத் தொடங்கினோம். அவர்களுடன் சில எளிய ஆங்கிலத்திலும் மலாய் மொழியிலும் தொடர்பு கொண்டோம். முதலில் கொஞ்சம் கடினமாக இருந்தது. பின்னர் நாங்கள் உண்மையானவர்கள் மற்றும் நல்லது செய்ய விரும்புகிறவர்கள் என அவர்கள் கண்டறிந்தபோது, அது எளிதாகிவிட்டது. மெதுவாக அவர்களும் மனந்திறந்தனர்.

அவர்களிடையே குறிப்பாக இந்தத் தொற்றுநோய் காலத்தின்போது சொல்லொன்னா பல்வேறுபட்ட துயரங்கள் உள்ளன. எங்களில் சிலர் அவர்களுக்குத் தேவையான அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திச் செய்ய முடிந்ததைச் செய்தோம், சிலரை மருத்துவமனைக்கும் அழைத்துச் சென்றோம், சிலர் இறந்தும் விட்டனர். இறந்தோரை நல்லடக்கம் செய்ய நாங்கள் உதவினோம். சமீபத்தில் ஒரு சூடான் பெண் பிரசவித்தாள். ஒரு சீனப் பெண், அவளையும், புதிதாகப் பிறந்த குழந்தையையும், அவளது மூத்த சகோதரனையும் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்று அவர்களின் எல்லாத் தேவைகளையும் கவனித்துக்கொண் டாள். மனிதநேயம் இங்கே அதிகமாகவே தேவைப்பட்டது.

### புலம்பெயர்ந்தோர் மற்றும் அகதிகள்

இந்த தொற்றுநோயின் காலத்தில் மக்களால் எவ்வளவு வெறுக்கப்படுகிறார்கள்! புதிய கோவிட் 19 தொற்றுக்கு இவர்களும் பெரும்பங்காற்றுகிறார்கள் எனக் குற்றம் சாட்டப்படுகிறார்கள். இவர்கள் தடுப்பூசி மையங்களில் கேலி செய்யப்படுகிறார்கள். வழிபாட்டுத் தலங்களில் அவர்களுக்கு வரவேற்பு இல்லை. பொருளாதார வீழ்ச்சியின் போது இவர்கள்தான் முதலில் பணிநீக்கம் செய்யப்படுகிறார்கள். கடப்பிதழ் காலாவதியின் காரணமாக இவர்கள் ஒரே நாளில் சட்டவிரோதக் குடியேறிகளாக மாறுகிறார்கள்.

எனவே, ஆரம்பத்தில், புலம்பெயர்ந்தோரும் அகதிகளும் மனிதர்கள் என்பதை நாம் ஒப்புக்கொண்டால், அவர்களின் மனித மாட்சியும் உரிமைகளும் இதர உள்ளூர் மக்களைப் போலவே மதிக்கப்பட வேண்டும். ஆன்மா இல்லாத உற்பத்தி காரணிகளாக அவர்கள் கருதப்படக் கூடாது. தகுந்த ஆவணமற்ற புலம்பெயர்ந்தோர் தடுப்பூசி மையங்களுக்கு பாதுகாப்பாக செல்வதை உறுதி செய்ய வேண்டும். சிந்திப்போம்... செயல்படுவோம்.

தமிழாக்கம்- ஆர்.கே.

# மலேசிய திருஅவையின் மேய்ப்புப்பணியில் பொதுநிலையினர்-சொற்பொழிவு

‘கனிதரும் சீடத்துவம்’ எனும் பொதுநிலையினர் மேம்பாட்டு பணிக்குழு, அதன் மாதாந்திர தொடர் உருவாக்கப் பயிற்சியின் கடந்த செப்டம்பர் 5 மற்றும் 19-ம் நாள்களில் ‘திருஅவையில் மேய்ப்புப்பணி’ எனும் தலைப்பில் இரு பயிற்சிகள் நடைபெற்றன. செந்தூல், புனித யோசேப்புப் பங்குத்தந்தை ஜோர்ஜ் பாக்கியசாமி அவர்கள் இப்பயிற்சியை இரு நாள்களிலும் சிறப்பாகப் படைத்தார்.

முதல் சொற்பொழிவில் இயேசுவின் கட்டளையைத் தொட்டுப் பேசிய அருள்தந்தை திருஅவையில் கனிதரும் சீடர்க்களாகத் திகழ:

- இயேசுவுடனான நமது தனிப்பட்ட உறவை பேணி வளர்க்க வேண்டும்.
- இப்பணியில் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும். பிறரும் அவ்வாறே இருக்க வேண்டும்
- நமக்கும் நமது சமுகத்திற்குமான திருவுளத்தையும் திசையையும் உய்த்துணர வேண்டும்.
- நமது மேய்ப்புப்பணியில் தூய ஆவியானவரின் ஏவுதலை நாட வேண்டும்.
- தலைமைத்துவப் பணியில் மற்றவர்களுக்கும் ஊக்கமூட்ட வேண்டும்.

எனும் கருத்துக்களை முன்வைத்து சொற்பொழிவாற்றினார்.

அடுத்து அடுந்த 19-ம் திகதி நடைபெற்ற இரண்டாவது பயிற்சியில், இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் விளைவால் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் நிமித்தம் பொதுநிலையினருக்கு பெருமளவில் மேய்ப்பபுப்பணி துறையில் ஈடுபாடு காட்ட வழிபிறந்துள்ளது என்றும்,



தூய ஆவியாரின் கனியையும் கொடைகளையும் பொதுநிலையினர் பொதுநன்மைக்காகப் பயன்படுத்த முன்வரவேண்டும் என்ற வேண்டுகோளை வலியுறுத்தினார்.

நிறைவாக, பங்கெடுப்பாளர்களின் கேள்விகளுக்கும் சிறப்பாக பதில் அளித்த அருள்தந்தைக்கும் பங்கேற்பாளர்களுக்கும் பணிக்குழுவின் தலைவர் M. செல்வராஜூ அவர்கள் நன்றி நவில்ந்தார். இயங்கலை வழியாக நடைபெற்ற இப்பயிற்சியில் 68 பேர் கலந்துகொண்டனர்.

*த. ஜோசப் சகாய ஆனந்த், மலாக்கா.*

# இணைந்து செய்யப்படவேண்டியது இறையாட்சிப் பணி

இன்றைய நற்செய்தி வாசகமும் கடந்த சில வாரங்களைப் போல் மாற்கு நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. கடந்த வார நற்செய்தியில் தங்களுக்குள் யார் பெரியவர் என்ற போட்டி-பொறாமை விவாதத்தில் ஈடுபடும் தமது சீடர்களை இயேசு கடிந்து கொள்கிறார். ஒருவர் முதல்வராக இருக்க விரும்பினால் அவர் அனைவரிலும் கடைசியானவராகவும் இருக்கட்டும் என இயேசு கற்பிப்பார். இன்றைய நற்செய்தியில், இயேசுவின் பெயரால் ஒருவர் பேயோட்டுகிறார், அவரைத் தடுக்க வேண்டுமென யோவான் முறையிடுகிறார். பழைய ஏற்பாட்டிலும், யோசுவாவும் மோசேயிடம் இவ்வாறே முறையிடுகிறார் (எண்.11:28). மோசே கூறிய பதிலையே இயேசுவும் கூறுவார்.

இன்றைய வாசகங்கள் கூறும் கருத்து, நாம் வாழும் இக்காலச் சூழ்நிலைக்கு மிகவும் பொருத்தமாக அமைகிறது. நீ பொறாமைப்படுகிறாயா? ஆண்டவரின் மக்கள் அனைவருமே இறைவாக்கினராக இருந்தால் எத்துணைச் சிறப்பு என யோசுவாவிடம் மோசே கூறுவார் (எண்.11:29). அனைவரையும் அரவணைக்க வேண்டும் என இயேசு சற்றுத் தெளிவாகவும் ஆழமாகவும் கூறுவார். அதாவது, நம்மிடையே ‘சகிப்புத்தன்மை’ வேண்டும். சகிப்புத்தன்மை என்றால் சம்பந்தப்பட்டவரை விட்டு விலகியிருப்பதல்ல. மாறாக, அடுத்தவரின் கருத்தும் நம்பிக்கையும் நமது கருத்துக்கும் நம்பிக்கைக்கும் மாறுபாடாக இருந்தாலும் அவற்றை நாம் ஏற்றுக்கொள்வது ‘சகிப்புத்தன்மை’. சகிப்புத்தன்மையைக் கடைப்பிடிக்கும் போது பொறுமை என்ற நற்குணம் தானாக சேர்ந்துவிடும். ஆனாலும், பொறுமையாக இருந்து அடுத்தவர் சொல்வது அனைத்தையும் கேட்க வேண்டும் என்பது சகிப்புத்தன்மை அல்ல என காலஞ்சென்ற கர்தினல் சோட்டர் பெர்னாண்டஸ் கூறியிருக்கிறார். இயேசுவும் இதனை வலியுறுத்தும் வகையில், சகிப்புத்தன்மை என்றால் புரிந்துணர்வும் அனுதாபமும் காட்டுவது என்கிறார் (மாற்கு 9:40).

ஆண்டவரின் மக்கள் அனைவருமே இறைவாக்கினராக இருந்தால் எத்துணைச் சிறப்பு (எண்.11:29) என்ற கருத்தை சிந்திக்கும் போது, கிறிஸ்துவின் குருத்துவ, இறைவாக்குரைக்கும் பணி, திருமுழுக்குப் பெற்ற எல்லாக் கிறிஸ்துவரின் கடமை என்று திருஅவை சட்டம் (204) கூறுகிறது. பொதுவாக இறைவாக்குரைப்பது என்றால் இறைவார்த்தையை எடுத்துரைப்பது என நாம் அறிவோம். ஆனால் இன்று நமக்கு நாமே இறைவாக்குரைப்பது முக்கியம். கடவுளின் வார்த்தை நம் அனைவருக்கும் கொடுக்கப்பட்டுள்ளது. முதலில், கடவுளின் வார்த்தையை நம் உள்ளத்தின் ஆழத்தில் பதிய வைப்போம். அதன்படி வாழ்ந்தாலே இறைவாக்குரைப்பதற்கு ஒப்பாகும். நமது சொல்லும் செயலும் (வாழ்க்கை) கிறிஸ்துவைப் பிரதிப்பலிக்கும். இதுவே நமக்கும் மற்றவர்களுக்கும் செய்யும் நற்செய்தி. இந்நற்செய்தி அனைவருக்கும் சொந்தம். யாரிடமிருந்தும் அந்த செய்தி வரலாம். கடவுளின் இரக்கம் அன்பு பற்றி பேசுவோரைத் தடுக்க வேண்டாம். ஏனெனில், கடவுளே எல்லா நன்மைகளையும் வழங்குகின்றார் (நற்கருணை மன்றாட்டு 3).

அந்தோணி இன்னாசி, ஸ்ரீ கெம்பாஙான்

**பொதுக்காலம் 26-ஆம் ஞாயிறு**

முதல் வாசகம்: எண் 11: 25-29
தி. பாடல்: 19: 7,9. 11-12. 13
2ம் வாசகம்: யாக் 1: 1-6
நற்செய்தி: மாற்கு 9: 38-48

**ஞாயிறு வாசகம் ஆண்டு 2**
**வாரநாள் முதல் வாசகம் –ஆண்டு 1**
**திருப்புகழ் மாலை -வாரம் 2**